**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 11.11.2025

அசல் வழக்கு எண். 188/2013

பி.சா.1 – சத்தியமூர்த்தி, த/பெ. நடராஜன்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்து எங்கு உள்ளது அதனுடைய சர்வே எண் என்ன என்றால் தாவா சொத்து திருப்பெரும்புதூரில் உள்ளது சர்வே எண் 5ஏ ஆகும். அதனுடைய முழு சர்வே எண் 1487/5ஏ என்றால் சரிதான். அந்த சொத்தினை வாதி கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். அதனை வாங்கி அவர் பெயரில் பட்டா மாற்றி அவர்தான் அனுபவித்து வந்தார் என்றால் சரியில்லை. அந்தக் கிரைய ஆவணத்தை பார்த்தீர்களா என்றால் பார்த்தது கிடையாது. சர்வே எண் 1487/5ஏ முழு பரப்பளவு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சர்வே எண் சப் டிவிஷன் செய்யப்பட்டுள்ளது அதுவாவது தெரியுமா என்றால் தெரியாது. அவ்வாறு சப் டிவிஷன் செய்யப்பட்ட சர்வே எண் 1487/5ஏ1 என்று மாறி உள்ளது தெரியுமா என்றால் தெரியாது. அந்த சர்வே எண்ணுக்கான பட்டா வாதிகள் பெயரில் இருக்கிறது என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram.